5. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இம்மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

5. அரசினர் மசோதாக்கள்—(தொடர்ச்சி)

(ஆ) 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதாவை . இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இம் மசோதாவை இப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.